**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியாளர் தொகுதி – பழங்குடியினர் நலம் – பழங்குடியினர் நலப் பொருண்மை குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களை பழங்குடியினர் நல இயக்குநருக்கு அளித்தல் – பழங்குடியினர் நல இயக்ககம் முழு அதிகாரத்தோடு கூடிய தனிப்பொறுப்புடன் செயல்பட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1) துறை**

அரசாணை (நிலை) எண்: **56**

**நாள் : 28.08.2017**
ஹேவிளம்பி வருடம்,
ஆவணித் திங்கள் 12 –ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண். 29, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே).துறை, நாள். 31.03.2000.
2. அரசாணை (நிலை) எண். 89, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே–1).துறை, நாள். 19.06.2015.
3. அரசாணை (ப) எண். 239, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1)துறை, நாள். 23.09.2015.
4. அரசாணை (நிலை) எண். 34, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1)துறை, நாள். 25.04.2017.
5. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். ப.மே./ அ.3/ 1096/2014, நாள். 07.07.2017.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியின மக்கள் நலனுக்கென தனியே பழங்குடியினர் நல இயக்ககம் 01.04.2000–இல் இந்திய ஆட்சிப்பணி அலுவலர் நிலையில் பழங்குடியினர் நல இயக்குநர், 1–நேர்முக எழுத்தர் மற்றும் 1–அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுடன் தோற்றுவித்து ஆணை இடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியின மாணாக்கர்களின் நலனுக்கென விரிவுபடுத்தப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட (Comprehensive Tribal Development Programme Scheme) நிதியின் கீழ் 5 தொழிற்பயிற்சி நிறுவனங்களை (Industrial Training Institute) புதிதாக ஏற்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2 கண்காணிப்பாளர், 4 உதவியாளர், 2 தட்டச்சர் ஆகிய பணியிடங்களை ஆதிதிராவிடர் நல இயக்ககத்திலிருந்து பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்தும், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர் / காப்பாளர் / பணியாளர்கள் மாறுதல் செய்தல் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தில் பணிபுரியும் அலுவல்

(த.பி.பா.)

சார்ந்த பணியாளர்களின் பணியிடம் மாறுதல் குறித்து பழங்குடியினர் நல இயக்குநரின் கவனத்திற்கு கொண்டுவந்து மாறுதல் வழங்கப்பட வேண்டும் எனவும், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் புதிதாக பணிநியமனம் (TRB – மூலம்) செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களை பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் வகையில் அந்த ஆசிரியர்களின் பணி சம்பந்தமான பொருண்மைகளை பழங்குடியினர் நல இயக்குநருக்கு மாற்றம் செய்யுமாறும், ஏற்கெனவே ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் இதர ஆசிரியர்கள், காப்பாளர்கள், GTR பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணியாற்றிட அவர்களது விருப்பத்தினைப் பெற்று அவ்வாசிரியர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டை பழங்குடியினர் நல இயக்குநருக்கு மாற்றம் செய்ய ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அறிவுறுத்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. அரசாணை (ப) எண். 185, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-1) துறை, நாள். 17.10.2016-இல் இத்துறையால் சென்னை மாவட்டம் தவிர்த்து 31 மாவட்டங்களிலுள்ள 72 தனிவட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) அலுவலகங்களில் உள்ள பல்வேறு (549) தற்காலிகப் பணியிடங்களுக்கு 30.06.2017 வரை பணி நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (ப) எண். 177, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-1) துறை, நாள். 04.10.2016-இல் ஆதிதிராவிடர் நல இயக்ககம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்கள், கப்பாலா ஆரம்ப சுகாதார நிலையம், நீலகிரி மாவட்டம் ஆகியவற்றிலுள்ள 629 தற்காலிகப் பணியிடங்களுக்கு 30.06.2017 வரை பணிநீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் பழங்குடியினர் மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட 7 மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்களை உரிய அலுவலர் மற்றும் பணியாளர்களுடன் புதிதாகத் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

6. மேலே, ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 01.04.2000-இல் பழங்குடியின மக்கள் நலனுக்கென பழங்குடியினர் நல இயக்ககம் தனியே தோற்றுவிக்கப்பட்டு போதிய பணியாளர்களின்றி மிகக் குறைந்த பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது எனவும், தற்போது நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், உதவி செயற்பொறியாளர், கூடலூர் மற்றும் குன்னூர் கோட்டங்களில் பழங்குடியினர் நல தனிவட்டாட்சியர்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 7 திட்ட அலுவலர்கள், தலைமை அலுவலகத்தில் இணை இயக்குநர் (கல்வி உதவித்தொகை), உதவி செயற்பொறியாளர், உதவி இயக்குநர் (கல்வி), கணினிப் பகுப்பாய்வாளர் என்பன போன்ற பல்வேறு பணியிடங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன எனவும், தற்பொழுது 310 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், 6 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள், 42 பழங்குடி மாணாக்கர் விடுதிகள், 6 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (Industrial Training Institute), 4 மண்டல அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் (Vigilance Cell), 2 தனிவட்டாட்சியர் அலுவலகங்கள், 7 திட்ட அலுவலகங்கள் மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் போன்றவை பழங்குடியினர் நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன எனவும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7. மேலும், 01.04.2000-இல் தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்ககம் நிர்வாக, நிதி அதிகாரங்கள் ஏதுமில்லாது பழங்குடியினர் நல இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகிறது எனவும், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட பழங்குடியினர் நல இயக்குநருக்கு நிர்வாக, நிதி அதிகாரங்களை அளிப்பது அவசியமாகிறது எனவும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்து, பழங்குடியினர் நல இயக்ககப் பொருண்மைகள் குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களை பகிர்ந்தளிக்குமாறு அரசிடம் பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

8. மேலே பத்தி 6 மற்றும் 7-இல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு விரிவாக கவனமுடன் ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், பழங்குடியினர் நல இயக்குநரகத்தை முழு அதிகாரத்தோடு கூடிய தனிப்பொறுப்புடன் செயல்படும் வகையில் பழங்குடியினர் நலப் பொருண்மைகளை தனியே பழங்குடியினர் நல இயக்குநர் கவனிக்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது செயல்படும் பழங்குடியினர் நலப் பொருண்மைகளை, அப்பொருண்மைகளை கையாளும் பணியாளர்களுடன் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்து இரு அலகுகளாகப் பிரித்து, நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பழங்குடியினர் நல இயக்குநருக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

i. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், பழங்குடி மாணாக்கர் விடுதிகள், பழங்குடியின தனிவட்டாட்சியர் அலுவலகம், பழங்குடியினர் பொருண்மைகளைக் கையாளும் மாவட்ட அளவிலான திட்ட அலுவலகங்கள் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககப் பணியாளர் பணியிடங்கள் ஆகியவை பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும்;

ii. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் தொடர்பான அனைத்து பணியிடங்களின் அதாவது அமைச்சுப் பணியிடங்கள், ஆசிரியர், காப்பாளர் பணியிடங்கள் மற்றும் அடிப்படை பணியாளர் பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர் உட்பட அனைத்து பணியிட நியமனம் மற்றும் மாறுதல், பணியிடங்கள் நிரப்புதல், பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்து வெளியிடுதல், பதவி உயர்வு அளித்தல், பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலை தனியே பராமரித்தல், ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான நேர்வுகள் போன்றவை பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் சம்மந்தப்பட்ட பணியமைப்பு தொடர்பானவற்றை பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் அரசளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்;

iii. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் தொடர்பான இனங்களில், சம்பளம், இதரப்படிகள், செலவினம், கட்டுமானம், பராமரிப்பு, எதிர்பாராச் செலவின நிதி, பல்வகைச் செலவுகள், உணவுக் கட்டணம் போன்ற நிதி தொடர்பான அனைத்து நேர்வுகளும் பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும்;

iv. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர், காப்பாளர் மற்றும் இதர பணியாளர்கள் அனைவரும் பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இவ்வாணையின் கீழ் கொண்டு வரப்படுகிறார்கள். அப்பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலை (Seniority) தற்போதுள்ள முதுநிலைப்படியே அதாவது அவர் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில், நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி இதர தகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு தனியே பராமரிக்க பழங்குடியினர் நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

v. பழங்குடியினர் நலத்துறையின் மூலம் நிதியுதவி பெறும் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கான நிதியை வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அல்லது மைய அரசிடமிருந்து பழங்குடியினர் நல இயக்குநர் நேரடியாகப் பெற்று வழங்க அதிகாரமளிக்கப்படுகிறது.

(த.பி.பா.)

vi. வன உரிமைச் சட்டம்-2006 செயல்முறைப்படுத்துவதை கண்காணிப்பதற்கும், வனப்பகுதிகளை சரியாக இனம் காணவும், அப்பகுதிகளில் வசித்து வரும் பாரம்பரிய பழங்குடியினர் இன மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திடவும், நில அளவைக் குழு (survey team) அவசியம் என்பதால், தற்போது இத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட வருவாய்த் துறையைச் சார்ந்த 84 சார் ஆய்வாளர்களில் (survey), 34 சார் ஆய்வாளர்கள் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்கென தனியே ஒதுக்கீடு செய்து பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். அவ்வாறு தேவைப்படும் 34 சார் ஆய்வாளர் பணியிடங்களின் ஒதுக்கீடு குறித்து வருவாய் நிர்வாக ஆணையருடன் இணைந்து பழங்குடியினர் நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

vii. நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளின் நிர்வாகம், கண்காணிப்பு, நிதி ஒப்பளிப்பு போன்ற பணிகள் இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து சம்மந்தப்பட்ட பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர்களுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. எனவே, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மேற்படி பொருண்மை குறித்த கோப்புகள் மற்றும் நிதிக் கணக்குகளை பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர்களிடம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

viii. மத்திய மாநில அரசின் பழங்குடியினர் நலத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று இயங்கி வரும் S.F.R.D.(Society For Rural Development) போன்ற தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கான நிதியினை வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெற்று வழங்கும் அதிகாரம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களிடமிருந்து சம்மந்தப்பட்ட திட்ட அலுவலர்களுக்கு (ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் மட்டும்) இவ்வாணையின் மூலம் மாற்றம் செய்யப்படுகிறது.

ix. இத்துறையின் கீழ் மாவட்ட அலுவலகங்களில் சிறப்பு வருவாய் ஆய்வாளர்களாக (இளநிலை உதவியாளர் நிலையில்) பணிபுரியும் 183 பணியாளர்களில் 50 வருவாய் ஆய்வாளர் மற்றும் தனிவட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) அலுவலகங்களில் பணிபுரியும் 163 உதவியாளர் பணியாளர்களில் 40 உதவியாளர்களை பழங்குடியினர் நல இயக்ககத்திற்கென ஒதுக்கீடு செய்து பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். அவ்வாறு தேவைப்படும் 40 உதவியாளர் பணியிடங்கள் குறித்து வருவாய் நிர்வாக ஆணையருடன் இணைந்து பழங்குடியினர் நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

x. இத்துறையின் கீழ் இயங்கி வரும் 84 தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) பணியிடங்களில், 34 தனி வட்டாட்சியர் பணியிடங்கள் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கென ஒதுக்கீடு செய்து, பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். அவ்வாறு தேவைப்படும் 34 தனி வட்டாட்சியர் பணியிடங்கள் குறித்து வருவாய் நிர்வாக ஆணையருடன் இணைந்து பழங்குடியினர் நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

..5..

xi. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் 34 தனி வட்டாட்சியர் பணியிடங்களுக்கு, பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கும் 16 மாவட்டங்களில், 34 தனி வட்டாட்சியர் (பழங்குடியினர் நலம்) அலுவலகங்களை புதிதாக ஏற்படுத்தியும், புதிதாக ஏற்படுத்தப்படும் இவ்வலுவலகங்களுக்கு இத்துறையில் பணிபுரியும் 50 சிறப்பு வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை), 34 சார்நில அளவையர் மற்றும் 40 அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களை ஒதுக்கீடு செய்து பழங்குடியினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். தேவைப்படும் இப்பணியிடங்கள் குறித்து வருவாய் நிர்வாக ஆணையருடன் இணைந்து பழங்குடியினர் நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

xii. வருவாய்த்துறையைச் சார்ந்த இத்துறையில் பணிபுரியும் தனிவட்டாட்சியர், உதவியாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர், சார்நிலை அளவையர், அலுவலக உதவியாளர் மற்றும் சங்கிலி ஆள் ஆகிய பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களில் பழங்குடியினர் நலத்துறைக்கு தேவையான பணியிடங்களை ஒதுக்கீடு செய்யுமாறு வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

xiii. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட 7 மாவட்டங்களில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள திட்ட அலுவலர்களது கட்டுப்பாட்டில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் தவிர்த்து, இதர மாவட்டங்களில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நல மாணாக்கர் விடுதிகளை கண்காணித்து ஆய்வுகள் மேற்கொள்ளும் பணியை பழங்குடியினர் நல இயக்கக உதவி இயக்குநர் (கல்வி) மேற்கொள்ள வேண்டும்.

xiv. பழங்குடியின மக்களுக்கென தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், ஆனைக்கட்டி, கூடலூர், கருமாந்துறை, கொல்லிமலை (நாமக்கல்), ஜமுனா– மரத்தூர் மற்றும் சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்) ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் 6 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (Industrial Training Institute) மற்றும் உதகமண்டலத்தில் செயல்படும் வாழ்க்கைத் தொழிற் கல்வி நிறுவனம் (Vocational Training Institute) ஆகியவற்றை பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக பழங்குடியினர் நல இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநருடன் கலந்து ஆலோசித்து அதன் அடிப்படையில் விரிவான கருத்துருவை அரசின் ஆய்வுக்காக அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் தொடர்பான அனைத்து பணியிடங்களின் அதாவது பொதுப்பணி, அமைச்சுப் பணி மற்றும் அடிப்படைப் பணிகளில் பணிபுரியும் அலுவலர், பணியாளர், ஆசிரியர், காப்பாளர் பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து அலுவலர் மற்றும் பணியாளர்களின் பணியமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் (பணியிட மாறுதல், பணியிடங்கள் நிரப்புதல், பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்து வெளியிடுதல், பதவி உயர்வு அளித்தல், பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலை தனியே பராமரித்தல், ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான நேர்வுகள் போன்றவை) பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வகையில் தற்போது, இத்துறையில் பணிபுரியும் அனைத்து அலுவலர், பணியாளர், ஆசிரியர், காப்பாளர், அடிப்படை பணியாளர்களின் விருப்பத்தினை அதாவது ஆதிதிராவிடர் நலத் துறையில் பணிபுரியும் அல்லது பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரியும்

விருப்பத்தினை ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் பெற வேண்டும். அதுவரையில், இவர்களது பணியமைப்பு தற்போது உள்ளவாறே ஒரே குடையின் கீழான பணிமூப்பின் அடிப்படையில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அலுவலர், ஆசிரியர், காப்பாளர் மற்றும் இதர பணியாளர்களின் விருப்பத்தை பெறும் நடவடிக்கை ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் 6 மாத காலத்திற்குள் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரே அலகிற்கு அதிகமானோர் விருப்பம் தெரிவிக்கும் நிலையில், பணிமூப்பின் அடிப்படையில் தனியரின் விருப்பம் பரிசீலிக்கப்பட வேண்டும். மேற்படி, 6 மாத காலத்திற்குள் விருப்பம் தெரிவிக்காத நிலையில், இவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மைகள் மற்றும் பணியிடங்களின் பணியமைப்பு பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி கட்டுப்பாட்டில் தானாகவே கொண்டு வரப்படும். அதன் பின்னர், இப்பொருண்மைகள் மற்றும் பணியாளர்களின் பணியமைப்பு குறித்து பழங்குடியினர் நல இயக்குநர் முழு அதிகாரத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அலுவலராக செயல்படுவார்.

10. நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், முத்தோரை பாலாடாவில் செயல்பட்டு வரும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், அம்மையத்தின் இயக்குநர் தலைமையில் முழு நிர்வாக அதிகாரங்களுடன் தனித்து இயங்கும்.

11. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் தொடர்பான மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் சம்மந்தப்பட்ட பணியிடங்களுக்கான தற்காலிகப் பணிவிதிகளைத் (Adhoc Rules) தோற்றுவித்து வரைவு விதிகளை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை.5.
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், உதகமண்டலம்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
மாவட்ட பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர்கள் (நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்)
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 6/18/35.
மாநில முதன்மைக் கணக்காயர் (கணக்கு மற்றும் பணவரவு),
361, அண்ணாசாலை, சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.

<u>நகல்:</u>

முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.
அனைத்து துறைத் தலைமை அலுவலகங்கள்
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை – 9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை– 9
நிதி(ஆதி(ம)பந)த் துறை, சென்னை – 9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

28.8.17
பிரிவு அலுவலர்.